வீடுகள் ஒதுக்கப்படுகின்றன. இதற்குக் காரணம் என்ன? இனியாவது இந்த நாட்டு மக்களுக்கு இப்படிப்பட்ட சலுகைகளைக் கொடுப்பதற்கு நம் அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில் யார் யார் குடிசைகளில் அந்தந்தப் பகுதிகளில் இருந்து வந்தார்களோ அவர்களுக்குத் தான் வீடே தவிர 'ஸன்ஸ் ஆப் தி ஸாயில்' தியரியை நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை.

*Electricity Schemes in North Arcot District*

* 524 Q.—THIRU R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that the Rural Electrification Corporation Limited has undertaken to finance the power supply at North Arcot district; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (அ) ஆம்.

(இ) இதுவரையில் வட ஆற்காடு மாவட்டத்திற்கு 176.722 இலட்சம் மதிப்புள்ள நான்கு கிராம மின்மய திட்டங்களும் (Rural Electrification Schemes), மேலும் பல்வேறு திட்டங்களும் வழங்கப்பட்டுள்ளன.

வேடந்தாங்கல் பறவைகள் உய்விடம்.

* 525 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள வண்ணப்பறவைகள் கூடும் வேடந்தாங்கலைச் சுற்றுலாத்துறையின் கீழ் மேம்படுத்த என்னென்ன திட்டங்கள் உள்ளன?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** வேடந்தாங்கலைச் சுற்றுலாத் துறையின் கீழ் மேம்படுத்துவதற்குத் திட்டம் எதுவும் இல்லை.